1993 அக்டோபர் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு.கே.எஸ். துரைமுருகன்.

திரு. கே.எஸ். துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேப்ப மரத்தினுடைய முக்கியத் துவம் பற்றி இங்கே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கிராமப்புறங்களில் பேய் பிடித்தவர்களுக்கு இந்த வேப்ப இலையைக் கொண்டு அடித்தால், பூசாரியை வைத்து அடித்தால் பேய் விலகிவிடும் என்ற ஒரு நம்பிக்கை இருந்து வருகிறது. நாட்டிலே இன்றைக்கு சிலபேர் பேய் பிடித்து அலைகிற காரணத் தால் இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வேப்ப மரங்களைத் தமிழகத்தில் அதிக அளவில் உருவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வெறும் நம்பிக்கையின் காரணமாக நடைபெறுவதல்ல. தொன்மைதொட்டே இந்தியத் திரு நாட்டில் வேப்பமரத்தை ஒரு சர்வரோக சஞ்சீவியாகக் கருது கிறார்கள். இது பேயை விரட்டுவது மட்டுமல்ல. பல்வேறு கொடிய வியாதி வந்தால் கூட அதைத் தடுக்க முடியும் என்று கருதப்பட்டது. எனவே பூர்வீக உணர்வாலே இதைச் செய்வ தல்ல. இதில் மிக அதிகமான மருந்துப் பொருட்கள் அடங்கி இருக்கிற காரணத்தால் தான் அவ்வாறு செய்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 33 திரு. ஆர். டி. அரங்கநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

33—

கொளஞ்சியப்பர் அரசு கலைக்கல்லூரியில பகுதிநேரப் படிப்பாக உள்ள எம்.பில். (M.Phil.,) படிப்பை முழு நேர படிப்பாக மாற்றுதல்

9502— திரு. ஆர். டி. அரங்கநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் தற்போது பகுதிநேரப் படிப்பாக உள்ள எம்.பில். (M.Phil.,) படிப்பை முழுநேர படிப்பாக மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது மாற்றி அமைக்கப்படும்

பேராசிரியர் மாண்புமிகு திரு. க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். டி. அரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விருத்தாசலம் நகரில் இருக்கின்ற கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் தற்போது எம். பில். பட்டப் படிப்பு பகுதி நேர படிப்பாக இன்றையதினம் இருந்துகொண்டு இருக்கிறது. மேலும் அந்தப் பகுதியில் கிராமப்புறங்களில் இருந்து வந்து படிக்கின்ற மாணவர்கள் எல்லாம் அதிக தொலை தூரத்திலிருந்து வந்து படித்துக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலே அந்த பகுதியிலே வேறு கல்லூரியில் இடம் கிடைக்காத மாணவர்கள் எல்லாம் இந்த எம். பில். செய்தால் நன்றாக இருக்கும் என்று எண்ணி அதிக மாணவர்கள் இன்றையதினம் எம். பில். செய்வதற்கு ஆர்வமாக இருக்கின்ற காரணத்தினால் இன்றைய தினம் அங்கே பகுதி நேரப் படிப்பாக இயங்கி வருகின்ற அந்த எம். பில். படிப்பு முழு நேர படிப்பாக உருவாக்கித் தந்தால் அது மாணவர்களுக்கு நலமாக இருக்கும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த எம். பில். படிப்பை முழு நேர படிப்பாக அமைத்துத்தர ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கல்லூரியில் எம். பில். படிப்பை முழு நேர படிப்பாக கொண்டுவரவேண்டுமென்றால் சில நிபந்தனைகளை அரசு விதித்திருக்கிறது. பல்கலைக் கழகத்தின் இசைவைப் பெறவேண்டும். போதிய இடவசதி வேண்டும். போதிய வழி காட்டிகள் 'கைட்ஸ்' துறையிலே இருக்கவேண்டும். மாணவர்கள் எண்ணிக்கை 6க்கு குறையாமல் இருக்கவேண்டும். அரசுக்கு கூடுதல் செலவினம் எதுவும் இருக்க கூடாது. கூடுதல் ஆசிரியர் நியமனம் கோரக்கூடாது. இப்படிப்பட்ட நிபந்தனைகளை ஏற்று முன்மொழிவு அனுப்பப் படுமானால் அரசு அதைப் பரிவோடு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 34. திருமதி கவிநிலவு தர்மராஜ். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

TRUTH ALONE TRIUMPHS